




# நீளம் என்றால் என்ன? வட்டம் என்றால் என்ன?

0124CH02



## சுற்றிப் பார்!

வித்யா தீதி அனைத்துக் குழந்தைகளையும் வட்டமாக அமரும்படி கூறினார்.




not to be republished


வகுப்பில் உள்ள குழந்தைகளை இந்த விளையாட்டை விளையாடச் சொல்லுங்கள். குழந்தைகள் நீளமான ஒரு பொருளின் பெயர் வட்டமான ஒரு பொருளின் பெயர் என இரண்டு பொருட்களின் பெயர்களைக் கூறவேண்டும். ஒவ்வொரு முறையும் அவர்கள் புதியதாக ஒரு பொருளின் பெயரைத்தான் கூற வேண்டும். முன்பு கூறிய பெயர்களை மீண்டும் கூறுவதைத் தவிர்த்துவிடுங்கள். நீளமான பொருட்களைப் பொறுத்தவரை, குழந்தைகள் உயரம், அகலம் போன்ற பரிமாணத்தில் கவனம் செலுத்தலாம். சான்றாக, சிலர் ஒரு டம்ளர் நீளமானது என கூறலாம், அது வட்டமானது என பிறர் கூறலாம். இரண்டு கருத்துக்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்படிச் சொல்வதன் தர்க்கத்தைக் குழந்தைகள் விளக்க வேண்டும்.



## சிந்தித்துச் செயல்படு


அ. வட்டமான பொருளையும் ◯ நீளமான பொருளையும் ▭.







© NCERT not to be republished


ஆ. ஒரேமாதிரி வடிவம் கொண்ட பொருட்களைப் பொருத்துக..










இ. ஒரேமாதிரி வடிவம் கொண்ட பந்தைத் தேர்வு செய்க.  .









© NCERT not to be republished


ஈ. ஒரேமாதிரி வடிவம் கொண்ட தொப்பியைத் தேர்வு செய்க.  .



உ. ஒரேமாதிரி வடிவம் கொண்ட கண்ணாடியைத் தேர்வு செய்க.  .



ஊ. ஒரேமாதிரி வடிவம் கொண்ட தீப்பெட்டியைத் தேர்வு செய்க.  .






உங்களைச் சுற்றியுள்ள பொருட்களை வைத்து வீடு, பொம்மை, கோபுரம், ரோபோட், பேருந்து என உங்களுக்கு விருப்பமான ஒன்றைச் செய்யுங்கள். நீங்கள் உங்களுக்குப் பிடித்த பொருளைச் செய்வதற்குக் குறிப்பேடு, புத்தகம், பென்சில் பெட்டி, நீர்க் குடுவை, பழைய, புதிய பெட்டிகள், பிறந்தநாள் தொப்பிகள், புனல் முதலியவற்றைப் பயன்படுத்தலாம்.

குழந்தைகளை இரண்டு குழுவாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவிடமும் ஒரு வடிவத்தைக் கொடுத்து அந்த வடிவத்தை ஒத்த இரண்டு பயன்படாத பொருட்களை எடுத்து வரும்படி கூறுங்கள். குழந்தைகள் எடுத்து வந்த பொருட்கள் எல்லாவற்றையும் வகுப்பறையில் கண்காட்சியாக வையுங்கள். குழந்தைகளிடம் அவர்கள் எடுத்து வந்த பொருட்களை வைக்கச்சொல்லி அவர்கள் ஏன் அவற்றை எடுத்து வந்தார்கள் என்ற காரணத்தையும் கூறவையுங்கள்.



© NCERT not to be republished

# புத்திசாலிப் பாட்டி



ஒரு காலத்தில் ஒரு சிறிய ஆட்டுக்குட்டி பாட்டியம்மாவைச் சந்திக்கச் சென்றது.

அப்போது ஒரு ஓநாய் ஆட்டுக்குட்டிச் செல்வதைப் பார்த்துவிட்டது. அது எப்படியாவது அந்த ஆட்டுகுட்டியைப் பிடித்துவிட வேண்டும் என எண்ணியது.





ஆட்டுகுட்டி ஓநாயிடம் கூறிய அனைத்தையும் பாட்டியிடம் கூறியது. இதைக் கேட்டதும் பாட்டிக்கு ஒரு சிந்தனைத் தோன்றியது. ஆட்டுக்குட்டியை டோலக்கின் உள்ளே வைத்து தன்னுடைய வீட்டிலிருந்து கீழே உருட்டிவிட்டுவிட்டாள் பாட்டி..




இந்தக் கதையைச் சத்தமாக வாசியுங்கள். குழந்தைகளைத் திரும்ப சொல்லவையுங்கள்.

© NCERT not to be republished

டோலக் வேகமாக உருண்டு ஓடியது ஓநாய் அதன் பின்னால் ஓடியது.



ஓநாயால் ஆட்டுக்குட்டியை பிடிக்க முடியவில்லை. ஆட்டுக்குட்டி பாதுகாப்பாக வீட்டுக்கு வந்தடைந்துவிட்டது.







பாட்டி ஏன் ஆட்டுகுட்டியை டோலக்கில் வைத்து உருட்டிவிட்டார்? என்பதற்கான காரணத்தைக் குழந்தைகளைக் கூறவையுங்கள். காட்டிலிருந்து ஆட்டுக்குட்டியின் வீடு வரையிலான சாய்வுப் பரப்பு

not to be republished

# நாம் சறுக்குவோம்

கீழே காட்டப்பட்டது போல, குழந்தைகள் கேரம் விளையாடிக் கொண்டுள்ளனர். நீங்களும் விளையாடலாம், எப்படி ஒரு ஸ்ட்ரைக்கர் மூலையில் இருக்கும் குழியில் சென்று விழுகிறது என்பதைப் பார்க்களாம்..




அ. கீழே கொடுக்கப்பட்ட படங்களில் உருளும் பொருட்கள் அருகில் உ எனம் சறுக்கும் பொருள் அருகில் ச என எழுதவேண்டும். .




ஆ. உங்களைச் சுற்றியிருக்கும் வெவ்வேறு பொருட்களைச் சேகரித்து அவை உருளக்கூடியப் பொருளா அல்லது சறுக்கிச் செல்லக்கூடிய பொருளா என்பதைப் பாருங்கள்..

இ. நீங்கள் சறுக்கி மற்றும் உருண்டு செல்லக் கூடிய ஒரு பொருளைப் பார்த்தீர்களா? ஆம் எனக் கூறினால் அதைப் பற்றி வகுப்பறையில் விவாதியுங்கள்..

குழந்தைகளிடம் அவர்கள் வீடு மற்றும் பள்ளிகூடத்திலிருக்கும் பலவேறு பொருட்களில் எவையெல்லாம் சரிவாகவும் உருட்டக்கூடியதாகவும் இருக்கிறது என்பதைக் கூறும்படி கேளுங்கள்.



© NCERT not to be republished

# சிந்தித்துச் செயல்படு.

பின்பவரும் பொருள் உருளுமா அல்லது சறுக்குமா அல்லது இரண்டு தன்மையும் கொண்டதா என்பதைக் கண்டுபிடி.

| பொருள் | உருளுபவை | சறுக்குபவை | உருளவும் சறுக்கவும் செய்பவை. |
|---|---|---|---|
|  | | | |
|  | | | |
|  | | | |
|  | | | |
|  | | | |
|  | | | |
|  | | | |
|  | | | |

© NCERT not to be republished

## திட்டப்பணி

அ. ஷூ பெட்டி, காலியான சாப்பாட்டுப் பெட்டி, பழப்பெட்டி போன்ற அனைத்து அட்டைப் பெட்டிகளைச் சேகரிக்கவும். முன்பகுதியில் நீள்வாக்கில் வெட்டி அதில் கண், வாய், மூக்கு வரைந்து ஒரு பொம்மலாட்ட பாவை போன்று மாற்றவும். உங்களுடைய பெற்றோர்கள், ஆசிரியர்கள் உதவியுடன் அதைவைத்து விளையாடுங்கள். உங்களுக்கு மிகவும் விருப்பமான கதையைத் தேர்வு செய்து அவற்றைப் பொம்மலாட்டம் நிகழ்த்துதலாக வகுப்பறையில் நிகழ்த்துங்கள்..

ஆ. பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி ஒரு கோபுரம் உருவாக்குங்கள். எந்தப் பொருட்களை வைத்து உயரமான நிலையான கோபுரத்தை உருவாக்கலாம் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

இ. மண்ணைப் பயன்படுத்திப் பல்வேறு வடிவங்கள் கொண்ட பொருட்களை செய்க.